Skill India
कौशल भारत-कुशल भारत

सत्यमेव जयते
GOVERNMENT OF INDIA
MINISTRY OF SKILL DEVELOPMENT
& ENTREPRENEURSHIP

N·S·D·C
National
Skill Development
Corporation
Transforming the skill landscape

B&WSSC
BEAUTY & WELLNESS SECTOR SKILL COUNCIL

# பயிற்சியாளர் கையேடு



துறை
**அழகு மற்றும் ஆரோக்கியம்**

துணைத்துறை
**அழகு மற்றும் அழகு நிலையம்**

தொழில்
**நக பராமரிப்பு சேவைகள்**

குறிப்புரை ID: BWS/Q0401இஏநசளைழை 1.0

# உதவி நக அழகுத் திறனாளர்

நூல் வெளியீட்டாளர்

அழகு மற்றும் ஆரோக்கியம் துறை திறமை மன்றம்
405, 4வது தளம், டிஎல்எ.்.ப் சிடி கோர்ட்,
சிகந்தர்பூர், குர்கான்.
மின்னஞ்சல்: றறற.டிறளளஉ.இை

அனைத்து உரிமைகளும் பதியப்பட்டவை,
முதல பதிப்பு, மார்ச் 2016

ISBN 978-1-111-22222-45-7

இந்தியாவில் அச்சிடப்பட்டது

பதிப்புரிமை © 2016
டீநயரவல ரூ றுநடடநெளள ளுநஉவழச ளுமடைட ஊழரஉெடை
405இ 4வா குடழழச னுடுகு ஊவைல ஊழரசவ
ளுமையனெநசிரசஇ புரசபயழெ
நுஅயடை: iகெழ;டிறளளஉ.இை
றுநடிளவைந: றறற.டிறளளஉ.இை
தொ-0124-4269030-33

## பொறுப்புதுறப்பு

இங்கு உள்ள தகவல்கள் அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையின் நம்பகமான ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறை, இத்தகைய தகவல்களின் துல்லியம், முழுமை அல்லது நிறைவு பற்றிய எல்லா உத்தரவாதங்களையும் மறுத்துரைக்கிறது. அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறை, இதில் அடங்கும் தகவல்கள் அல்லது அதற்கான விளக்கங்களில் உள்ள பிழைகள், விலக்குகள் அல்லது குறைபாடுகளுக்கு பொறுப்பு ஏற்காது. புத்தகத்தில் உள்ளடக்கிய பதிப்புரிமைப்பொருளின் உரிமையாளர்களை கண்டுபிடிக்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்பட்டுள்ளது. புத்தகத்தின் எதிர்கால பதிப்புகளில் எந்த ஒரு ஒதுக்கப்பட்ட தகவலும் ஒப்புதலுக்காக தங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால் பிரசுரர்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். இந்தத் தகவலை நம்பியிருந்த எந்தவொரு நபரும் இழந்த எந்தவொரு இழப்பிற்கும் அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையின் எந்த நிறுவனமும் பொறுப்பாகாது. இந்த வெளியீட்டில் உள்ள பதிப்பு பதிப்புரிமை பெற்றதாகும். இந்த வெளியீட்டின் எந்த பகுதியும், எந்த வடிவத்திலோ அல்லது எந்த வகையிலோ, காகிதம் அல்லது மின்னணு ஊடகங்களிலோ அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையால் அங்கீகரிக்கப்படாமல் மீண்டும் உண்டாக்கப்படவோ, சேமிக்கப்படவோ அல்லது விநியோகிக்கப்படவோ கூடாது.



"தொழில் திறன்களே இந்தியாவிற்கு முன்னேற்றம். இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் செலுத்தவேண்டும் என்றால், தொழில் திறன்களை வளர்ப்பதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும்."

**ஸ்ரீ நரேந்திர மோடி**

இந்தியாவின் பிரதம மந்திரி

# Certificate

**COMPLIANCE TO**
**QUALIFICATION PACK-NATIONAL OCCUPATIONAL STANDARDS**

is hereby issued by the

**SKILL COUNCIL FOR BEAUTY AND WELLNESS**

for

**SKILLING CONTENT : PARTICIPANT HANDBOOK**

**Complying To National Occupational Standards Of**

**Job Role/ Qualification Pack:** ‘Assistant Nail Technician’ **QP No.** ‘BWS/Q0401 NSQF Level 3’

**Date of Issuance** Sept 15th, 2016
**Valid up to*** Sept 15th, 2018

**Valid up to next review date of the qualification or the ‘Valid up to’ date mentioned above (whichever is earlier)*

Authorised signatory
(Skill Council for Beauty and Wellness)

## ஒப்புதல்கள்

அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறை மற்றும் ப்ரொஜிலென்ஸ் கேப்பபிலிடி டெவலப்மென்ட் ப்ரைவெட் லிமிடெட், இந்த பயிற்சிக்கையேட்டை தயாரிப்பதில் பங்களித்த அனைத்து தனிநபர்களுக்கும் அமைப்புகளுக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

பல்வேறு தொகுப்புகளை தயாரிக்க ஒத்துழைத்த நபர்களுக்கும் சிறப்பு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். தனிப்பட்ட தொகுப்புகளுக்கான ஆய்வு மற்றும் பொருளடக்கம் வழங்கிய அனைவருக்கும் ஆழந்த பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த கையேட்டின் தயாரிப்பு, அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையின் ஆதரவு இல்லாமல் சாத்தியமில்லை. இந்தத்துறையின் கருத்துகள், தொடக்கம் முதல் முடிவு வரை மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்தது மற்றும் அதின் உள்ளீடுகளினால், இன்று இந்தத்துறையிலுள்ள திறன் இடைவெளிகளை இணைக்க முயற்சி செய்துள்ளோம். இந்த பயிற்சிக்கையேட்டை ஆய்வு செய்து உள்ளீடுகள் வழங்கிய விஎல்சிசி, ஆர்த்தி, என்ரிச், ஜெசிகேஆர்சி, நெயில் ஸ்பா இந்தியா மற்றும் பிலாஸம் கோச்சார் அரோமா மேஜிக் ஆகியவர்களுக்கும் சிறப்பாக நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

இந்த பயிற்சியாளர் கையேடு, எதிர்கால முயற்சிகளை மேற்கொள்ள உதவும் வாழ்நாள் சொத்தான, சிறப்பு திறன் அடைய விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர்களக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையில் ஒரு பிரகாசமான தொழில் செய்யவும் உதவும்.

## பதிவேடு பற்றி

இந்தியாவில் அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையின் வளர்ச்சி ஊயுபுசு 18.6மூ என்ற அளவில் உள்ளது. விரைவில் 100,000 கோடியை அடையலாம். அழகு மற்றும் உடல் நல பராமரிப்பு கட்டாயம் தேவை எனக்கருதும் அதிகரித்து வரும் செழுமையான மற்றும் நடுத்தர வர்க்க பிரிவில், இந்தத் துறை, விருத்தியடைந்து வருகிறது. முழுமையான நல்வாழ்வின் மீதான அதிகரித்த வலியுறுத்தலும், அழகாகவும் இளமையாகவும் தோற்றமளிக்க வேண்டும் என்ற மக்களின் விருப்பமும் அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையின் இதர உந்துதல்களாகும். அழகுத்துறையில் வேலைவாய்ப்பானது, 23மூ ஒழுங்கமைந்த பிரிவுகளும் 15மூ ஒழுங்கற்ற பிரிவுகளும் உள்ளடக்கிய, 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 600,000க்கும் மேலான திறனாளரின் பற்றாக்குறையுடன், ஊயுபுசு 20மூ என்ற அளவில் வளர எதிர்பார்க்கப்படுகிறது, தொழில் வளர்ச்சியைத் தக்கவைக்க, இந்தத் துறை, சேவையின் தரம் நோக்கி கவனம் செலுத்துவதன் மூலம், திறமையான தொழிலாளர்களை பணியமர்த்துவதற்கு தேடுகின்றது.


இந்த பயிற்சிக் கையேடானது தத்துவார்த்த மற்றும் நடைமுறை பயிற்சியின் மூலம் உதவி நக அழகுத் திறனாளரை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இந்த கையேடானது உதவி நக அழகுத் திறனாளரின் தகுதிப்பகுதியான தேசிய தொழில் தரநிலைகளை உள்ளடக்கியதாகும்:

1. பணி இடத்தை தயார் செய்தலும் பராமரிப்பும்
2. மானிக்யூர் (கால் விரல்கள் நகங்கள் அழகுபடுத்துதல்) மற்றும் பெடிக்யூர் (கை விரல்கள் நகங்கள் அழகுபடுத்துதல்) சேவைகள்
3. யு.வி ஜெல் நகங்கள் மற்றும் அக்ரலிக் நகங்களை பயன்படுத்தி கூடுதல் நக இணைப்பு சேவைகள் வழங்குதல்
4. மறு நிரப்புதல் - செய்தல்
5. எளிய மற்றும் அடிப்படை நக அழகுக் கலைச் சேவைகளை வழங்குதல்
6. பணியிடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை பராமரித்தல்
7. பணிபுரியும் இடத்தில் ஆக்கபூர்வமான அபிப்பிராயத்தை உருவாக்குதல்

இந்த பயிற்சிக் கையேடானது உதவி நக அழகுத் திறனாளரின் குறைந்தபட்ச கல்வித்தகுதியாக ஏஐஐ ஆம் வகுப்பு தேற்சி பெற்றவருக்கு முன்னுரிமை தரும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும், கற்றலின் முக்கிய நோக்கங்கள் மற்றும் பங்கேற்பாளர் பெற்றுக்கொள்ளும் ஆகியவை வெற்றின் குறிப்பிட்ட பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. அவரது நிலையான வழிகாட்டுதலுக்கும் ஆதரவிற்கும், அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையின் சபைத்தலைவரான திரு. வந்தனா லுத்ராவுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறைக் குழு, தலையான பயிற்சியாளர், ஆலோசகர் மற்றும் இந்த பயிற்சிக் கையேடை உருவாக்குவதில் தங்கள் மதிப்புமிக்க உள்ளீடுகளை வழங்கியுள்ள எங்கள் தொழில் பங்குதாரர்களையும், நாங்கள் ஒப்புக்கொள்ள விரும்புகிறோம். இந்த பயிற்சிக் கையேடானது, எங்கள் நண்பர்கள் அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறையில் தொழிலை கற்றுக்கொண்டு வளர்த்தக்கொள்ள ஒரு நல்ல ஆதரவாக இருக்கும் என நம்புகிறோம்.

## பயன்படுத்தப்படும் சின்னம்


முக்கிய கற்றல் விளைவுகளை


படிகள்


குறிப்புக்கள்


நோக்கங்கள்


நடைமுறை


உடற்பயிற்சி

# பொருளடக்கம்


| வ.எண் | தொகுதிகள் மற்றும் பிரிவுகள் | ப.எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| | பிரிவு 1.1 - இந்தத் திட்டத்தின் நோக்கங்கள் | 3 |
| | பிரிவு 1.2 - அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறை | 6 |
| 2. | பணி இடத்தை தயார் செய்தலும் பராமரிப்பும் (BWS/N9001) | 13 |
| | பிரிவு 2.1 - சேவை செய்யும் பணியிடத்தை தயார் செய்தல் மற்றும் பராமரித்தல் | 15 |
| 3. | மானிக்யூர் (கால் விரல்கள் நகங்கள் அழகுபடுத்துதல்) மற்றும் பெடிக்யூர் (கை விரல்கள் நகங்கள் அழகுபடுத்துதல்) சேவைகள் (BWS/N0401) | 31 |
| | பிரிவு 3.1 - உடல் அமைப்புகள் மற்றும் உடற்கூறு | 33 |
| | பிரிவு 3.2 - மானிக்யூர் - கால் விரல்கள் நகங்கள் அழகுபடுத்துதல் | 32 |
| | பிரிவு 3.3 - பெடிக்யூர் - கைவிரல்கள் நகங்கள் அழகுபடுத்துதல் | 78 |
| 4. | யு.வி ஜெல் மற்றும் அக்ரலிக் கூடுதல் நக இணைப்புகள் (BWS/N0415) | 93 |
| | பிரிவு 4:1 - உங்களையும், வாடிக்கையாளரையும் சேவைக்கு தயார் செய்தல் | 95 |
| | பிரிவு 4.2 - யுவி ஜெல் கூடுதல் நக இணைப்பு | 98 |
| | பிரிவு 4.3 - அக்ரிலிக் கூடுதல் நக இணைப்புகள் | 101 |
| 5. | மறு நிரப்புதல் - செய்தல் (டீறுளு.'.C0406) | 111 |
| | பிரிவு 5.1 - மறு நிரப்புதலை செய்தல் | 113 |
| 6. | நக அழகுத் திறனாளி, மேம்பட்ட நக பாதுகாப்பு சேவைகள் அளிப்பதற்கு உதவுதல் (BWS/N0416) | 124 |
| | பிரிவு 6.1 - கூடுதல் நக இணைப்பு சேவைகள் | 125 |
| 7. | தொழில்முறை மற்றும் மொழித்திறன்கள் (BWS/N9003) | 146 |
| | பிரிவு 7.1 - தொழில்முறைத் திறன்கள் | 147 |
| | பிரிவு 7.2 - மொழித்திறன்கள் | 155 |
| 8. | பணியிடச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (BWS/N9002) | 166 |
| | பிரிவு 8.1 - பணியிடச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | 167 |
| 9. | பணிபுரியும் இடத்தில் ஆக்கபூர்வமான அபிப்பிராயத்தை உருவாக்குதல் (BWS/N9003) | 184 |
| | பிரிவு 9.1 - பணிபுரியுமிடத்தில் ஆக்கபூர்வமான அபிப்பிராயத்தை உருவாக்குதல் | 185 |




Not for Sale - For Internal Circulation only

| வ.எண் | தொகுதிகள் மற்றும் பிரிவுகள் | ப.எண் |
|---|---|---|
| 10. | வேலைவாய்ப்புத்திறனும் தொழில் முனையும் திறனும் | 203 |
| | பிரிவு 10.1 - தனிப்பட்ட பலம் மற்றும் மதிப்பீடுகள் | 207 |
| | பிரிவு 10.2 - கணித அறிவு : ஒரு மீள்பதிவு | 225 |
| | பிரிவு 10.3 - பண காரியங்கள் | 230 |
| | பிரிவு 10.4 - வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பிற்காக தயார் செய்தல் | 239 |
| | பிரிவு 10.5 - தொழில் முனைவை புரிந்துகொள்ளுதல் | 249 |
| | பிரிவு 10.6 - தொழில் முனைவோராக தயார்படுத்திக்கொள்ளுதல் | 275 |


-



Not for Sale - For Internal Circulation only

Skill India
कौशल भारत-कुशल भारत

सत्यमेव जयते
GOVERNMENT OF INDIA
MINISTRY OF SKILL DEVELOPMENT
& ENTREPRENEURSHIP

N·S·D·C
National
Skill Development
Corporation
Transforming the skill landscape

B&WSSC
BEAUTY & WELLNESS SECTOR SKILL COUNCIL

# 1. அறிமுகம்

பிரிவு 1.1 - இந்தத் திட்டத்தின் நோக்கங்கள்

பிரிவு 1.2 - அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத்துறை



## கற்றலின் முக்கிய விளைவுகள்

இந்தப் பயிற்சியின் முடிவில் உங்களுக்குப் பின்வரும் திறன்கள் கிடைத்திருக்கும்:

1. திட்டத்தின் நோக்கத்தை விளக்குதல்
2. நகத் தொழில்நுட்ப நிபுணரின் பொறுப்புகளையும் பங்கினையும் விளக்குதல்
3. அழகு மற்றும் நலவாழ்வுத் துறை குறித்து விளக்குதல்

# பிரிவு 1.1: இந்தத் திட்டத்தின் நோக்கங்கள

## இந்தப் பிரிவின் நோக்கங்கள்

இந்தப் பிரிவின் முடிவில் உங்களுக்குப் பின்வரும் திறன்கள் கிடைத்திருக்கும்:

1. திட்டத்தின் நோக்கத்தை விளக்குதல்
2. நகத் தொழில்நுட்ப நிபுணரின் பொறுப்புகளையும் பங்கினையும் விளக்குதல்

## 1.1.1. அறிமுகம்

இன்று அழகு மற்றும் உடல் நல பராமரிப்புத் துறை இந்தியாவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சீரான, குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கும் நாடு முழுவதும் லட்சக்கணக்கான வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் இது கணிசமான பங்காற்றுகிறது. நுகர்வு கலாச்சாரத்தின் வளர்ச்சி, உலகமயமாதல், மாறிவரும் வாழ்க்கை முறை, நலவாழ்வு சார்ந்த சுற்றுலா வளர்ந்துவருவது ஆகியவை இந்த மாபெரும் வளர்ச்சிக்கான காரணங்கள்.



படம் 1.1 உதவி நக அழகுத் திறனாளர்

அழகுக் கலை மற்றும் உடல் நலம் பேணும் துறையில் ஏற்பட்டுள்ள வேகமான வளார்ச்சியுடன், ஏற்கெனவே நன்கு வள்ர்ந்து, ஒழுங்கமைவுடன் இயங்கும் தேசிய மற்றும் உலக அளவிலான பெரு நிறுவனங்கள் உள்ளே வந்ததால், மிக நன்கு பயிற்சி பெற்ற அழகுக் கலைஞர்களின் தேவை அதிகரித்தது. அதே சமயம், எந்த அளவுக்குத் தேவையோ, அந்த எண்ணிக்கையில் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. இந்தத் திறன் மிகு பணியாளர் குறைபாடு, இத்துறை வேகமாக வளர்வதற்குத் தடையாக உள்ளது. ஆகவேவ இத்துறையில் திறமை வளர்த்தல் மற்றும் பயிற்சி என்பது தொழில் ரீதியாகவும், துறைக்குமே மிகப் பெரிய சவாலாக இருக்கிறது.

## 1.1.2 உதவி நக அழகுத் திறனாளர்

அழகு மற்றும் உடல் நலம் பேணும் துறையில் ஒரு உதவி நக அழகுத் திறனாளரின் பணி, அழகுக் கலி சார்ந்த சேவைகளை அளிக்கும் அழகு நிலயம் மற்றும் ஸ்பா மையங்களில் மிக முக்கியமானது.

உதவி நக அழகுத் திறனாளர், அழகுக் கலை சார்ந்த சேவைகள், உடல் நலம் பராமரிப்பு தொடர்புள்ள விஷயங்கள் ஆகியவற்றில் அறிவுத் திறன் பெற்றவராகவும் சேவை மனப்பான்மை உடையவராகவும் இருக்க வேண்டும். நயமுடன் பேசுபவராகவும் சேவகள் சார்ந்த அணுகுமுறையில் பணி செய்வது ஆகியன இருந்தால், வாடிக்கையாளருக்கு உலகத் தரத்தில் சேவைகளை அளிக்க முடியும்.

தொழில் நுட்ப ரீதியில் பார்த்தால், நக அழகுத் திறனாளருக்கு மனித உடல் அமைப்பு குறித்து சரியான புரிதல் இருக்க வேண்டும். குறைந்த பட்சம், கை, கால்களில் இருக்கக் கூடிய எலும்புகள், தசைக:ள், ரத்த நாளங்கள் ஆகியன் இருக்கும் இடங்கள் மற்றும் இயக்கப் பயன்பாடுகள் ஆகியவற்ரைப் பற்றி அறிந்திருத்தல் அவசியமானது. நகத்தின் பாகங்கள அடயாளம் கண்டு கொள்ள முடிவது, அடிப்படைத் திறனாகவும், அவற்றின் வளர்ச்சி நலைகள்,

நக ஒழுங்கமைவில் ஏற்படக் கூடிய பிரச்சினகள் மற்றும் அது தொடர்புடைய சேவைகள் ஆகியன ப்ற்றி நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.



படம் 1.2 உதவி நக அழகுத் திறனாளர் வழங்கும் நக சேவைகள்

நகம் தொடர்புடைய பல்வேறு வகையான சேவைகள், அதற்குப் பயன்படும் கருவிகள், உபகரணங்கள், பயன்படுத்தப் படும் பல்வேறு அழகு சாதனத் தயாரிப்புகள் ஆகியன பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

உதவி நக அழகுத் திறனாளரின் பணியும் பொறுப்புகளும்

உதவி நக அழகுத் திறனாளருக்கு மேனிக்யூர், கை நகங்கள் அழகுப் படுத்தல்) பெடிக்யூர் (கால் நகங்கள் அழகுப் படுத்தல்), ஆரோக்யம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பல்வேறு அழகுக் கலை சார்ந்த தயாரிப்புகள் ஆகியன பற்றி அறிந்திருப்பது அடிப்படைத் தேவை என்று கூறலாம்.

உதவி நக அழகுத் திறனாளருக்கு அடிப்படை அல்லது ஆரம்பகட்ட மானிக்யூர் மற்றும் பெடிக்யூர் ஆகியவற்றை செய்யத் தெரிந்திருக்க

வேண்டும். இவை தவிர, ஸ்பா. மானிக்யூர் மற்றும் பெடிக்யூர் சேவைகளையும் அளிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மேலும், அழகு நிலையத்தின் சூழ்நிலையைப் பராமரிப்பது, அழகுக் கலை சார்ந்த தயாரிப்புகளைப் பற்றித் தெரிந்து கொண்டு, அவற்ரை வாடிக்கையாளருக்கு எடுத்துக் கூறி விற்பது உள்ளிட்ட பணிகளையும் செய்ய வேண்டும்.

உதவி நக அழகுத் திறனாளருக்குத் தேவையான பண்பமைவுகள்

உதவி நக அழகுத் திறனாளர், பின்வரும் பண்பமைவுகளைப் பெற்ரிருக்க வேண்டும்.

- வாடிக்கையாளர் இயல்பு அறிதல் - வரும் வாடிக்கையாளரை ரிலாக்ஸாக உணர வைக்க வேண்டும். தங்களுக்கு என்ன தேவை என்பது அவர்களுக்குத் தெளிவாக சொல்லத் தெரியாவிட்டாலும், அவர் கூறுவதை வைத்து புரிந்து கொள்ளும் திறன் இருக்க வேண்டும். பணியிடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வது முக்கியம். அப்போதுதான் அந்த இடத்தில் தங்களுக்கு நல்ல முறையில் சேவை கிடைக்கும் என்று வாடிக்கையாளர்கள் நம்புவார்கள்.
- ·உங்களது தோற்றம் நேர்த்தியாக இருப்பது முக்கியம் - நீங்கள் பார்ப்பதற்கு, சுத்தமாக, நேர்த்தியானவராக இருக்க வேண்டும். கசங்கிய உடை, சுத்தமில்லாத தோற்றம், செயல்பாடுகளில் அவசரம்
- போன்றவற்றை வாடிக்கையாளர் விரும்பமாட்டார். அதுபோல, சங்கடப் படுத்தும் உடல் மணம், துர்நாற்றமுள்ள சுவாசம், பொதுவான உடல் நலம் ஆகியன் பற்றி மிகக் கவனமாக இருக்க வேண்டும்.
- ஆலோசனை கூறுங்கள் - உங்களது வாடிக்கையாளர் தனக்கு என்ன தேவை என்பதைப் பர்ரி அறியாதவராக, புரியாதவராக, குழப்பமடைந்தவராக இருக்க வாய்ப்புகள் உண்டு. அப்போது நீங்கள் அவருக்கு என்ன தேவை இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு தெளிவாக விளக்கினால், அவர் அதைப் பாராட்டுவார். இது போல சொல்வதல்ல் உங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை.
- அவசரம் கூடாது - வரும் வாடிக்கையாளரை எந்த விதத்திலும் அவசரப் படுத்தாதீர்கள். அவருக்கான அவகாசத்தை அளியுங்கள்.
- உங்களது துறை சார்ந்த புதிய தகவல்களை அவ்வப்போது அறிந்து கொள்ளுங்கள். - உங்களது துறை சார்ந்த புதிய தகவல்களை அவ்வப்போது அறிந்து கொள்ளுவது மிக முக்கியம். அப்போதுதான் வ்சாடிக்கையாளரின் கேள்விகளுக்கு பதில், விளக்கங்களைத் தர முடியும்.
- வாடிக்கையாளரை மதியுங்கள் - உங்களது வாடிக்கையாளருடைய முடிவுகளை மதுயுங்கள். உங்களது கருத்துக்களை அவர்கள் மீது திணிக்காதீர்கள். ஏனென்றால் அவர்களுக்கு எந்த விதமான சேவை வேண்டும்



படம் 1.3 உதவி நக அழகுத் திறனாளர் பயன்படுத்தும் கருவிகளும், உபகரணங்களும்

என்பதை அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அதை நீங்கள் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- அழகுக் கலை சார்ந்த தயாரிப்புகளைக்ம் குறித்துத் தெரிந்து கொள்வது அவசியம் - யான நீங்கள், வாடிக்கையாளருக்கு எந்த விதமான அழகு சாதனஉதவி நக அழகுத் திறனாளி பொருட்கள், தயாரிப்புகள் தேவை என்பதை சொல்லத் தெரிய வேண்டும். உதாரணமாக வாடிக்கையாளருக்கு உலர்ந்த சருமம் இருந்து, அதற்குத் தகுந்த முக கிரீம் வேண்டும் என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரது சரும வகையை மனதில் வைத்துக் கொண்டு, அதற்கான சிறந்த தயாரிப்பை அவருக்கு சிபாரிசு செய்ய வேண்டும். இதற்கு அழகு சாதனத் தயாரிப்புகளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்து இருக்க வேண்டியது அவசியம்.
- சிறந்த தொடர்புத் திறன் அவசியம். - உதவி நக அழகுத் திறனாளி என்பது, அந்தத் திறனில் மட்டுமின்றி, மிக நன்றாக, முறையாக பேசத் தெரிந்தவராக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்தான் வாடிக்கையாளருடன் முதலில் பேசும் நபராக இருப்பார். அதன் பிறகுதான் அவரது தொழில் திறன் பன்படுத்தப் படும். ஆகவே அவர் வரும் வாடிக்கையாளருக்கு சிறந்த முகமன் கூறி வரவேற்பது, தேவையான விவரங்களை இனிமையாக, தெளிவாகப் புரியும்படி எடுத்து சொல்வது. அவரது சந்தேகங்களுக்கு நிதானமாக விளக்கங்கள் கூறுவது போன்றவற்றை செய்ய வேண்டும்.
- சரியான உடல் மொழியை வெளிப்படுத்தல் - உதவி நக அழகுத் திறனாளி, வாடிக்கையாளரைக் கையாளும்போது, எந்த விதத்திலும் நிதானம் இழக்கக் கூடாது.அவரது உடல் மொழி , இயல்பாக அதே சமயம் சுறுசுறுப்பாக, செய்யும் பணியை மகிழ்ச்சியாக செய்வதை வெளிப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். புன்னகையுடன் நேர்த்தியாக, விரைவாக சேவைகளை அளிக்க வேண்டும்.

### 1.1.3 பயிற்சி திட்டத்தின் முக்கிய நோக்கமும் மீள் பார்வையும்

இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் பின் வரும் அம்சங்களை மீள்பார்வை செய்து கொள்ளலாம்.

- அழகுக் கலை மற்றும் உடல் நலம் சார்ந்த துறை
- பணியிடத்தை தயார் செய்வது மற்றும் பராமரிப்பது
- மானிக்யூர் மற்றும் பெடிக்யூர் சேவைகள் அளிப்பது
- ஸ்பா மானிக்யூர் மற்றும் பெடிக்யூர் சேவைகள்
- ஆரோக்கிய பராமரிப்பு மற்றும் பணியிடத்தின் பாதுகப்பு அம்சங்கள்
- பணியிடத்தில் நேர்மறைப் பதிவுகளை உருவாக்குதல்

# பகுதி 1.2: அழகு மற்றும் உடல் நலம் பேணல் துறை

## இப்பகுதியின் நோக்கங்கள்

இப்பகுதியின் நோக்கங்கள் - இதன் முடிவில் உங்களால் பின்வருனவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.


1. இந்தியாவில் அழகுக் கலைத் துறையின் நிலை.

## 1.2.1 The Beauty Industry in India

இந்தியாவைப் பொறுத்தவரை அழகுக் கலை மற்றும் உடல் நலம் பேணல் துறை என்பது புதியது என்றாலும், ஆரோக்கியத்தைப் பற்றியும், உடல் நலம் பேணுவது பற்றியும் விழிப்புணார்வு அதிகமாகிக் கொண்டே வருகிறது. அழகுப் படுத்திக் கொள்வது, உடலை கச்சிதமாக சீராக வைத்துக் கொள்வது ஆகியன தொடர்புடைய துறைகள் வேகமாக வள்ர்ந்து வருகின்றன. இதன் காரணம், தனது புறத் தோற்றம், மிக அழகாக நேர்த்தியாக, தனக்கான தனி பாணியுடன் இருக்க வேண்டும் என்று பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இரு பாலரும் விரும்ப ஆரம்பித்து இருப்பதுதான்.

நகர்ப் புற அழகு நிலையங்கள், அவற்றுக்கான சந்தை மதிப்பு என்பது உலக அளவு ஒப்பிட்டால், மிகக் குறைவுதான். ஆனாலும் கூட இது வேகமாக வளர்ந்து வருகிறது என்பதும் உண்மைதான். இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் உடல் நலம் பேணால் துறையின் வளர்ச்சி குறித்து கே பி எம் ஜி (ஶ்ரீஆபு) வெளியிட்ட ஆய்வறிக்கையின்படி, இந்திய அழகு மற்றும் உடல் நலம் பேணல் துறையின் சந்தை மதிப்பு, 2017∴18 ஆண்டில் ரூ. 80, 730 கோடிகளாக இருக்கும். இந்த மதிப்பு, 2012∴13 - ம் ஆண்டைய கால கட்டத்தில் இருந்த சந்தை மதிப்பான ரூ.41, 224 - கோடிகள் விட இரட்டிப்பாகும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இந்த தொழில் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளதால்,தனியார் பங்கு நிறுவனங்களும் இதில் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளன.

அழகுக் கலை - ஒரு தொழில் - வர்த்தகப் பார்வை




படம் 1.4 இந்தியாவின் அழகு மற்றும் உடல் நலம் பேணல் துறையின் புள்ளிவிவரங்கள்

அழகுக் கலைத் தொழிலில் குறிப்பிட்டு சொல்கிறார்போல மிகச் சிறப்பான வளர்ச்சி கண்டிருப்பது சிகை பராமரிப்பு மற்றும் அலங்காரம் என்று கூறலாம்.

ஏ.ஸி. நீல்சன் நிறுவனத்தாரின் ஆய்வறிக்கையின்படி, சிகை பராமரிப்பு மற்றும் அலங்காரம் சார்ந்த துறையின் இந்திய சந்தை மதிப்பு, ரூ. 3,630 கோடிகள். இதன் வருடாந்திர வளர்ச்சி, சதவிகிதம் 20�மூ

இதே போல வேகமான வளர்ச்சி பெற்றிருக்கும் மற்றொரு பிரிவு மணப்பெண் அலங்காரம். முன்பெல்லாம், மணப்பெண் மட்டும்தான் திருமணத்திற்கு முன்பு அழகு நிலையத்திற்கு சென்று அலங்காரம் செய்து கொள்வார். ஆனால் இப்போது அவரது தோழிகள், உறவினர்கள் ஆகியோரும் உடன் வருகிறார்கள். இவர்களுக்கு என்று தனியான சிறப்பு சலுகை திட்டங்களும் நடைமுறையில் இருக்கின்றன.

தரமான அழகுபடுத்தலுக்கு மிகத் தேவையானது தனிச் சிறப்புள்ள அறிவுத் திறன். இதன் காரணமாக பயிற்சி மையங்களும் பெருகி வருகின்றன. பெரும்பாலான அழகுக் கலை நிறுவனங்கள் அவர்களுக்கான தனியான ஆசிரியர்களை இதற்காக பணியமர்த்துகிறார்கள். உதாரணமாக, பல கலைகள் கொண்ட ஏடுஊஊ நிறுவனத்தினர் அழகுக்கலை தொடர்பான 75 வெவ்வேறு வகையான பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர். அதுபோல, அரசின் அழகுக் கலை மற்றும் உடல் பராமரிப்புத் துறையின் திறன் வளர்ப்புக் குழுமம் தனியாக பல்வேறு வகைப் பட்ட பயிற்சித் திட்டங்களை செயல்படுத்திவருகிறது. இத்தகைய காரணங்களால், இயல்பாகவே இத்துறையில் வேலை வாய்ப்புகள் பெருகிவருகின்றன. KPMG - யின் உடல் நலம் பேணல் குறித்த ஆய்வறிக்கையில் 2013 - ல் இத்துறையில் பணிபுரியும் பணியாளர்களின

எண்ணிக்கை 3.4 மில்லியன்களாக இருந்தது. இந்த எண்ணிக்கை 2022 - ல் 12.1 மில்லியன்களாக அதிகரிக்கும் என்று கூறுகிறது. அழகுக் கலையை தொழில் முறையில் செய்யும் நபருக்கு மாத வருமானம்.ரூ. 15,000.∴ என்பதிலிருந்து ரூ. 65,000.∴ வரை இருக்கிறது.

வளர்ச்சிக்கான காரணங்கள்

- அழகுக் கலை மற்றும் உடல் நலம் பேணல் துறை வளர்ச்சிக்கான காரணங்கள்.
- வளர்ந்துவரும் நுகர்வோர் கலாச்சாரம், மிக வேகமான நகரமயமாக்கம் மற்றும் இதற்காக செலவழிக்கக்கூடிய அளவுக்கு வருமானப் பெருக்கம் ஆகியன மிக முக்கியமான காரணங்கள்.
- இளம் வயது நுகர்வோர்கள், அதுவும் ஊடகங்கள் மூலம் இத்துறையைப் பற்றி தொடர்ந்து அறிந்து வந்துள்ள இவர்களால், அழகாக தோற்றமளிக்க வேண்டும் என்ற ஆவல் பெருகியுள்ளதும் முக்கியமான காரணம்.
- இளமையாகத் தோற்றமளிக்கும் வகையில் சருமம் இருக்க வேண்டும் என்ற தீவிர ஆர்வமும் இந்தத் துறையை மிக வேகமாக வளர்ச்சி பெற செய்திருக்கிறது. அதிகமான எண்ணிக்கையில் வாடிக்கையாளர்கள் நுகர்வோர் அழகுக் கலை தொடர்பான சிகிச்சை செய்து கொள்ள முற்படுகின்றனர். மேலும் வயது தெரியாமல் இளமைத் தோற்றமளிக்க வேஎண்டும் என்ற விருப்பமும் அதற்கான தேடலும் அதிகமாகிக்கொண்டே வருவதால் இத்துறை எதிர்காலத்தில் குறிப்பிடத் தகுந்த வளர்ச்சியைப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.


## 1.2.2 தொழில் முறை வகைப்பாடுகள்

அழகு நிலையங்கள், மற்றும் சிகை அலங்கார மையங்கள்:

அழகுபடுத்தல் மற்றும் சிகை அலங்கரப் பிரிவில் சருமம், சிகை அலங்காரம், நகப் பாதுகாப்பு மா்றும் அழகுப் படுத்தல் தொடர்பான சேவைகள் அடங்கும். வாடிக்கையாளரின் தேவைக்கு ஏற்ப உடல் தோற்றத்தைப் பொலிவு பெறச் செய்தல் அல்லது அலங்காரம் செய்தல் ஆகியன உள்ளிட்டது.

அழகு சாதனங்கள் மற்று நேரடி விற்பனை - அழகு சாதனத் தயாரிப்புகள், சிகை அலங்காரப் பொருட்கள், ஆகியவற்றின் நேரடி விற்பனை. இதில் ஒப்பனைப் பொருட்கள, குளியலறை மற்றும் தனிப்பட்ட ஆரோக்கியத்திற்கான தயாரிப்புகள் அடங்கும். இவற்றுடன், வயது தொடர்புடைய ஆரோக்கியம் மற்றும்

தோற்ற பொலிவிற்கான தயாரிப்புகள்




படம் 1.5 அழகு மற்றும் உடல் நலம் பேணல் துறையின் வகைப்பாடு

சேரும். இத்தகைய தயாரிப்புகள் ஒப்பனை சார்ந்த வெவ்வேறு காரணங்களுக்காக

விற்பனையாகின்றன.

உடற்பயிற்சி மற்றும் உடல் மெலிவதர்கு - இதில் உடற்பயிற்சி, யோகா மற்றும் மனம் -

உடல் சார்ந்த பயிற்சிக்கும், உடல் எடைக் குறைப்பு, உடல் மெலிதல் ஆகியவற்றிற்குப் பயிற்சியளிப்பு.

புத்துணார்வு மையங்கள் - இதில் ஸ்பா தொடர்புள்ள சேவைகள் வழங்கப் பறும். இவற்றில் ஸ்பா பற்றிய கற்பித்தல், அது தொடர்பான தயாரிப்புகள், நிகழ்வுகள் போன்றவை அடங்கும். இந்தத் துறையைப் பொறுத்த மட்டில், உடலையும் மனதையும் ரிலாக்ஸாக உணரச் செய்வதற்கு முன்முனைப்புடன் வழங்கப் படும் சேவைகள் என்றே கூறலாம்.

மாற்று சிகிச்சை மையங்கள் - மாற்று சிகிச்சை முறைகள் மூலம் மருத்துவ ரீதியான நோய் ஆய்வு முறைகள், மற்றும் சிகிச்சை அளிக்கப்படும்.

இரு பாலருக்கான சேவைகள் - ஒழுங்கமைவுடன் இயங்கும் பல்வேறு பிரிவுகள் இது போன்ற சேவைகளை அளித்துவருகின்றன. இரு பாலருக்குமான அழகு மற்று உடல் நலம் பேணல் மையங்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவருகின்றன.

புதிய இடங்கள், பகுதிகளில் விரிவாக்கம்.- நகர்புறம், பெருநகரங்கள் ஆகியன தவிர, பிற பகுதிகளிலும் அழகு மற்றும் உடல் நலம் பேணல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு வருகிறது. இதன் மூலம் இந்தத் துறை மற்ற பிற இடங்களுக்கும் விரிவாக்கம் செய்யப் பட்டு வருகிறது. சிறு நகர்ப் புறங்களில் இட வாடகை, ஊழியர் ஊதியம் ஆகியனகுறைவாக இருப்பது, விரிவாக்கத்திற்கான முக்கியக் காரணங்களாய் விளங்குகின்றன.

சர்வதேச அழகு சாதனத் தயாரிப்புகள் - வளர்ந்து வரும் வாடிக்கையாளர் எண்ணிக்கை, சர்வதேச முத்திரை பெற்ற அழகு சாதனத் தயாரிப்பாளர்கள், இந்திய சந்தையில் நுழைவதற்கு முயற்சிகளில் ஈடுபடக் காரணமாய் இருக்கிறது.

## அத்தியாயச் சுருக்கம்

அழகு மற்றும் உடல்நலம் பேணல் துறையின் பெரும் வளர்ச்சியுடன், தேசிய, சர்வதேச நிறுவனங்களின் பிரவேசமும் நிகழ்ந்ததில் பயிற்சி பெற்ற அழகுக் கலை நிபுணர்களுக்கான தேவை பெருமளவில் உருவாகியுள்ளது. இந்தத் துறையில் திறமை வாய்ந்த, பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கான கடுமையான பற்றாக்குறை நிலவுவதால் இத்துறையின் வளர்ச்சிக்கு இது பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது. திறன் வாய்ந்த, பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்குவதே இந்தத் துறையும் அது சார்ந்த தொழில்துறையும் செய்ய வேண்டிய பெரும் பணியாகும்.

இந்தத் துறையில் உதவி நக அழகுத் திறனாளரின் பங்கு:

- அழகு நிலையம் மற்றும் ஸ்பா மையங்களில், பல்வேறு வகையான சேவைகளை வழங்கும் இவர்களது பணி மிக நுனுக்கம் நிறைந்தது.
- அழகுக் கலை தொடர்புடைய பல்வேறு சேவைகளையும், ஆற்றும் முறைகளையும் அறிந்திருப்பது மட்டுமின்றி, அடிப்படையில் சேவை மனப்பான்மையுடன் இருத்தல் அவசியம்.
- உலகத் தரம் வாய்ந்த சேவைகளை வாடிக்கையாளருக்கு அளிக்க வேண்டிய இவர்களுக்கு மிகத் திறமையான தொடர்புத்திறனும் சேவை செய்வதில் இயல்பான அணுகுமுறையும் இருத்தல் அவசியம்.

உதவி நக அழகுத் திறனாளிக்கு இருக்க வேண்டிய பண்பமைவுகள் வருமாறு:

- வாடிக்கையாளர் இயல்பு அறிந்து நடத்தல்
- நேர்த்தியான, சுத்தமான தோற்றப் பொலிவுடன் இருத்தல்.
- வாடிக்கையாளருக்கு சரியான ஆலோசனைகள் வழங்குதல்.
- அவசரப்படாதிருத்தல்
- துறை சார்ந்த புதிய தகவல்களை அறிந்திருந்தல்
- வாடிக்கையாளரை மதித்தல்.
- அழகுக் கலை தொடர்பான தயாரிப்புகளைப் பற்றி அறிந்திருத்தல்
- திறமையான தொடர்புத் திறன்
- மிகச் சரியான உடல் மொழி

இந்தியாவில் அழகு மற்றும் உடல் நலம் பராமரிப்புத்துறை என்பது புதிது என்றாலும், உடல் ஆரோக்கியம் மற்றும் நலன் பராமரிப்பு போன்றவை பற்றிய விழிப்புணர்வு அதிமாகிக் கொண்டே வருகிறது. அழகு மற்றும் உடல் வடிவம் பராமரிப்பு ஆகியன தொடர்புடைய துறை மிக வேகமாக வளர்ந்து வருவதால், ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருமே, தங்களது தோற்றப் பொலிவு மற்றும் வடிவம் ஆகியவற்றைப் பற்றி அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகின்றனர்.

அழகு மற்றும் உடல் நலம் பராமரிப்புத் துறை வளர்ச்சி பெற்று வருவதற்கான காரணங்கள்

- பெருகிவரும் நுகர்வோர் கலாச்சாரம், வேகமான நகர்ப்புற மயமாக்கம் மற்றும் வருமானப் பெருக்கம்.
- இளம் நுகர்வோர்
- இளமையாகத் தோற்றமளிக்கும் சருமத்தின் மேல் அபரிமிதமான விருப்பம்
- பல்வேறு விதமான புதுமைத் தயாரிப்புகள்

அழகுகலை தொடர்புள்ள தொழில்களின் வகைகள்

- அழகுக் கலை மையங்கள் மற்றும் சிகை அலங்கார மையங்கள்.
- தயாரிப்புகள் மற்றும் நேரடி விற்பனை
- உடல் பயிற்சி மற்றும் உடற்தோற்ற பராமரிப்பு
- புத்துணர்வு மையங்கள்
- மாற்று சிகிச்சை மையங்கள்
- ஆண் பெண் இருபாலாருக்குமான அழகு நிலையங்கள்
- பல்வேறு பகுதிகள் புதிய இடங்களில் விரிவாக்கம் செய்தல்
- சர்வதேச அழகு மற்றும் ஒப்பனைத் தயாரிப்புகள்

பயிற்சி

1. உதவி நகம் அழகுக் கலை திறனாளியின் குணாம்சங்கள் எவை என்பதை குறிப்பிடுங்கள்.

   a. அழகுக்கலை தயாரிப்புகளைப் பற்றி அறிந்திருத்தல்
   b. சரியான உடல் மொழி
   c. சுத்தமான தோற்றம்
   d. எதையும் அவசரமாக செய்வது

2. அழகு மற்றும் உடல் பராமரிப்புத் துறையின் போக்குகள் என்ன?

   a. மாறிய நுகர்வோர் மனநிலை
   b. இருபாலருக்குமான அழகு கலை மையங்கள்
   c. சர்வதேச அழகு பராமரிப்பு தயாரிப்புகள்
   d. மேற்குறிப்பிட்ட அனைத்தும்

3. அழகு மற்றும் உடல் நலப் பராமரிப்புத் துறையின் மூன்று பிரிவுகளைப் பற்றி குறிப்பிடுக.

## குறிப்புகள்



Skill India
कौशल भारत-कुशल भारत

सत्यमेव जयते
GOVERNMENT OF INDIA
MINISTRY OF SKILL DEVELOPMENT
& ENTREPRENEURSHIP

N·S·D·C
National
Skill Development
Corporation
Transforming the skill landscape

# 2. பணி இடத்தை தயார் செய்தலும் பராமரிப்பும்

B&WSSC
BEAUTY & WELLNESS SECTOR SKILL COUNCIL

பிரிவு 2:1 பணியிடத்தை தயார் செய்தல் மற்றும் பராமரித்தல்



BWS/N9001

## அறியக்கூடிய முக்கிய விஷயங்கள்

இ ப் பயிற்சியின் முடிவில் தெரியவரும் விவரங்கள்:

1. பணியிடத்தை முறையாகத் தயார் செய்து, பராமரித்தல்.
2. பணியிடத்தை சுத்தமாக வைத்திருத்தல்
3. தேவையான உபகரணங்களை பொருத்துத்தல்
4. கழிவுப் பொருட்களை சரியான முறையில் அகற்றுதல்



விற்பனைக்கு அல்ல – உள் சுழற்சிக்கு மட்டும்

# பிரிவு 2:1: சேவை, பணி இடங்களை தயார் செய்வதும் பராமரிப்பும்

## இப்பகுதியின் நோக்கங்கள்

இப் பிரிவை படித்து முடித்தபின் உங்களால் செய்யக்கூடுபவை

1. சேவை பணி இடங்களை தயார் செய்தல்
2. சேவை பணி இடங்களை பராமரித்தல்

## 2:1:1 முன்னுரை

எந்த ஒரு அழகுக் கலை தொடர்புடைய சேவைக்கும் பணியிடம் மிகவும் சுத்தமாகவும், நேர்த்தியாக வும், அமைத்து, வருபவர்களை இன்முகத்தோடு வரவேற்பது மிக முக்கியம். இந்தப் பகுதியைப் பொறுத்தவரை, மானிக்யூர் மற்றும் பெடிக்யூர் ஆகிய சேவைகளை வழங்கும் பணி இடத்தைதயார் செயதல் மற்றும் பராமரித்தல் குறித்து விளக்கும். இப்பணி இடத்தை உருவாக்குதல் என்பது அதற்கான கருவிகள், உபகரணங்கள் மற்றும் பொருட்களைப் பெற்றுக்கொண்டு ,அதன்பிறகு வாடிக்கையாளர்களும் உதவி நக அழகுக் கலைத் திறனாளியும் அமர்வதற்கான ஏற்பாடுகளு ம் அடங்கும்.
சேவைகள் முடிந்தவுடன் சேரும் கழிவுகளை எப்படி நீக்குவது என்பதையும், வாடிக்கையாளர் பற்றிய விவரக் குறிப்புகளும் மற்றும் உங்களுடைய தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் தோற்றத்தை குறித்த முக்கியத்துவத்தைப் பற்றியும் அறியலாம்.

சில முக்கியமான சொற்பதங்கள்

- அகற்றுதல் (அ) அப்புறப் படுத்தல்
- எரிதொட்டி
- சுத்தப்படுத்தல்
- அலங்காரம்
- விவரக் குறிப்பு அட்டைகள்

அழகு நிலையத்தில் உங்களுக்கான முக்கியக் கடமைகளில் ஒன்று, மூத்த உதவி நக அழகுக் கலைத் திறனாளிக்கு உதவிகள் செய்தல், வேலைக்கு ஏற்றாற் போல சரியான தேவைப்படும் பொருட்களையும், உபகரணங்களையும் எடுத்து வைத்தல் ஆகும்.

இதைத் தவிர வாடிக்கையாளரை அவர்கள் கேட்கும் சேவைகளுக்கு ஏற்ப தயார் செய்து, நீங்கள் அளிக்கும் சேவைகளில் ஒவ்வொரு சேவைக்கும் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் எவை என்பதையும் அறிந்து இருத்தல் வேண்டும். வாடிக்கையாளரின் விவரக் குறிப்புகளைப் பார்த்து, அவரது தேவைக்கு ஏற்றாற் போல பொருட்களை தேர்ந்து எடு அறிந்திருத்தல் வேண்டும்.

## 2:1:2 விவரக் குறிப்பு அட்டை

ஒரு வாடிக்கையாளரின் விவரக்குறிப்பு அட்டை என்றால், உங்களுடைய அழகு நிலையத்தில் ஏற்கெனவே பெற்ற சேவைகளின் குறிப்பும் வாடிக்கையாளர் பற்றிய விவரம் அவரது தேவைகள், பற்றிய பதிவாகும். வாடிக்கையாளரின் யோசனைகள் மற்றும் கருத்துக்களை உவி நக அழகுத் திறனாளி எதிர்கால சேவைக்காகபதிவு செய்தல் வேண்டும்.



படம் 2.1 வாடிக்கையாளரின் விவரக் குறிப்பு அட்டையை நிரப்புதல்

சேவை அளிப்பதற்கான தயாரிப்புப் பணியின் ஒரு பகுதியாக வரவேற்புப் பிரிவிலிருந்து வந்திருக்கும் வாடிக்கையாளரின் விவரக் குறிப்பு அட்டையைப் பெற்று, பின்வருவனவற்றை செய்ய வேண்டும்:

- வாடிக்கையாளரின் விவரக் குறிப்பு அட்டையின் மூலம் வாடிக்கையாளர் முன்பதிவு செய்த சேவையையும் அதற்கான ஏற்பாடுகளைக் குறித்தும் தெரிந்து கொள்ள தேவைப்படும்.
- வாடிக்கையாளரின் விருப்பு வெறுப்பு
- அவரது சருமத்தின் வகைப்பாடு, அதற்கு முன்னால் பயன்படுத்திய தயாரிப்புகள் குறித்தும்
- அச் சமயத்தில் உதவி நக அழகுத் திறனாளி பயன்படுத்திய முறைகள் பற்றிய விவரங்களையும் அறிந்து அவற்றையே மீண்டும் தேர்வு செய்ய ஏதுவாகும்.
- வரவேற்புப் பிரிவிலிருந்து வாடிக்கையாளர் விவரக் குறிப்பு அட்டையைப் பெறும் போது அவரது பெயர், இணைப் பெயர்கள் மற்றும் விலாசம் ஆகியவற்றை சரியாக இருக்கிறதா என்று சோதித்து அறிய வேண்டும்.
- வாடிக்கையாளர் விவரக் குறிப்பு அட்டையில் பெயர்களை சரி பார்க்க வேண்டும். ஒரே பெயர் பலருக்கு அமைய வாய்ப்புகள் உள்ளதால் சரியான பெயரை, சோதித்து அறிந்து கொள்ள வேண்டும்.
- இவற்றை செய்த பிறகு உதவி நக அழகுக் கலைத் திறனாளியிடம் சேவையை ஆரம்பிக்கும் முன்னர், விவரக் குறிப்பு அட்டையை அவரிடம் கொடுத்து விட வேண்டும்.

## 2:1:3 நக அழகு நிலையம் (ளயடழஎ)

பல்வேறு பிற சேவைகளை அளிக்கும் இடமானதால் இருக்கிறது, அந்தந்த சேவைகளுக்கு ஏற்றாற்போன்ற வசதிகளும், ஏற்பாடுகளும், சரியான உபகரணங்களும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொரு விதமான சேவைக்கும் அழகு நிலையம் இருக்க வேண்டிய முறை:

- கோடை காலத்தில் இதமான குளிர்ச்சியான சூழ்நிலையும், குளிர்காலத்தில் மிதமான வெப்பச் சூழலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.
- சுத்தமாகவும், நேர்த்தியகாவும் இடத்தை வைத்திருக்க வேண்டும்
- வாடிக்கையாளரின் உடைகளை மாட்டுவதற்கு தோதான இடமும் வசதியும் இருக்க வேண்டும்.
- வெளி உலக சப்தங்கள், இரைச்சல்கள், உள்ளே வராதவாறு ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இதமான இசையை ஒலிக்கச் செய்யலாம்.
- நல்ல வெளிச்சம் ஏற்படுத்தக்கூடிய விளக்குகளும் ,மஸாஜ் செய்யும்போது, அதே விளக்குகளை குறைவாகவும் வசதிகளும் இருக்க வேண்டும்.
- நகக் கலைத் திறனாளி, தடையின்றி நடமாடக்கூடிய இட வசதி வேண்டும்.
- பல்வேறு பொருட்கள் கருவிகள் போன்றவற்றை ஆங்காங்கே வைக்கக் கூடாது.
- சேவைக்குத் தகுந்தாற்போல அனைத்தையும் ஒருங்கிணைந்து வைகக் வேண்டும்.
- குளிர் நீர் மற்றும் சுடு நீர் வரும் வகையில் தனி ஏற்பாடுகள் தேவை.



படம் 2.2 நக அழகு பராமரிப்பு நிலையம்

சேவைகளை அளிக்கத் தேவையான ஏற்பாடுகள்:
பணி செய்யும் இடம் மிகவும் சுத்தமாகவும், தேவையான பொருட்கள் கைக்கெட்டும் தூரத்திலும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அத்தகைய சாதனங்கள், பொருட்கள் வைக்கப்பட்ட தள்ளு வண்டி அல்லது நிலையான அலமாரி ஆகியன அருகே இருக்க வேண்டும். இதற்குத் தேவையான பஞ்சு மற்றும் திசு காகிதங்கள் இருக்க வேண்டும்.

பணி செய்யும் பகுதியை உருவாக்குவது எப்படி?

- சரி பார்த்துக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிய குறிப்புகள் வருமாறு
- வாடிக்கையாளர் பற்றிய விவரக்குறிப்பு அட்டையும், அதனுடன் பேனாவும், சாதனங்கள் வைக்கும் தள்ளுவண்டியில்.்.மேஜையில் இருக்க வேண்டும். இது, ஏற்கெனவே இருக்கும் விவரங்களை சரி பார்க்கவும் புதிய குறிப்புகளை எழுதி வைக்கவும் உதவும்.
- வாடிக்கையாளர் விரும்பிய சேவையை அவர் பெறும்போது அணிய வேண்டிய மேலங்கி தயார் நிலையில் இருக்க வேண்டும். அவரது உடைகளைத் தனியாக வைக்க வேண்டிய தேவை இருந்தால், அவற்றை மாட்டுவதற்கு கொக்கிகள் தனியாக பொருத்தப்பட்ட இடம் வேண்டும்.
- சுத்தமான துவாலைகள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.
- சேவைக்காக வாடிக்கையாளர் அமரும் சாய்வு நாற்காலியில், தனியாக பொருத்தப்பட்ட அடிப்பகுதி, மற்றும் தனியாக நிற்கக் கூடிய இருக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும.
- மேஜை.்.தள்ளுவண்டியின் மேற்புறம் மற்றும் பணியிடம் கிருமி நீக்கம் செய்யப்பட்டு தூய்மையான மேலுறையால் மூடப்பட வேண்டும்
- சேவையின்போது பயன்படுத்த இருக்கும் சாதனங்கள், தயாரிப்புகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியன கிருமிநாசினியால் தூய்மையாக்கப்கட்டு அருகிலேயே தள்ளுவண்டி அல்லது அலமாரி அல்லது மேஜை ஆகியவற்றில் கிருமிநாசினியால் நிரப்பப்பட்ட கலனில் தயாராக வைக்கப்பட வேண்டும்.
- போதுமான அளவுக்கு பஞ்சுச் சுருள்கள் மற்றும் திசு காகிதங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான சுத்தமான முறையில் சேவையை ஆரம்பிக்கவோ முடிக்கவோ முடியும்.